**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 22-09-2023**

**திருவள்ளூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-09-22 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-09-23 | 2023-09-24 | 2023-09-25 | 2023-09-26 | 2023-09-27 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 3.0 | 13.0 | 6.0 | 3.0 | 5.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 34.0 | 33.0 | 33.0 | 33.0 | 33.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 28.0 | 27.0 | 27.0 | 26.0 | 26.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 90 | 80 | 80 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 10 | 10 | 8 | 10 | 8 |
| காற்றின் திசை (கோணம்) | 200 | 200 | 200 | 180 | 250 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 8 | 8 | 7 | 7 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் ஐந்து நாட்களுக்கு மிக லேசான முதல் மிதமான மழை பெய்யக்கூடும்; அடுத்த ஐந்து நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை 33.0°C-34.0.0°C ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26.0°C-28.0°C ஆகவும் இருக்கலாம்; காற்றின் ஈரப்பதம் 50-90% வரை எதிர்பார்க்கப்படுகிறது; காற்றின் வேகம் மணிக்கு 8.0-10.0 கி.மீ வரை இருக்கலாம்; காற்றின் திசை தெற்கு முதல் மேற்கு தென்மேற்கிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

27.09.2023 முதல் 03.10.2023 வரை தமிழ்நாட்டில் மழைப்பொழிவு இயல்பை விட அதிமாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை மற்றும் அதிகபட்ச வெப்பநிலை இயல்பு நிலையில் பதிவாகக்கூடும்.

## குறுஞ்செய்தி :

வரும் நாட்களில் மிக லேசான முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர்களுக்கு பூச்சிக்கொல்லி தெளிக்கும் போது ஒட்டும் திரவம் கலந்து தெளிக்கவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | 1.வரவிருக்கும் சம்பா பருவத்துக்கு நெல் நாற்றங்கால் தயார் செய்ய விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது; 2.விதை நேர்த்தி- ஒரு கிலோ விதைக்கு/பேசிலஸ் சப்டிலீஸ் 10 கிராம், ஒரு லிட்டர் தண்ணீர் என்ற விகிதத்தில் கலந்து இரவு முழுவதும் வைத்து, விதை நேர்த்தி செய்து பின் விதைப்பை மேற்கொள்ளலாம்; 3.இலை சுருட்டுப்புழு- ஏக்கருக்கு அசிபேட் 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 4. குலை நோய்- ஏக்கருக்கு ப்ராபிகோனசோல் 75 WP @ 200 மில்லி லிட்டர் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும் அல்லது ட்ரைசைக்ளோசோல் 2 கிராம் / லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்கவும்; 5. இலைக் கருகல் நோய்- நடவுக்கு பிறகு 30 மற்றும் 45 நாட்களுக்குள் ஏக்கருக்கு இரண்டு முறை காப்பர் ஹைட்ராக்ஸிட் 77 WP 500 கிராம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |
| நிலக்கடலை | நிலக்கடலையில் துரு நோய் ஏற்படுவதற்கு சாதகமனா வானிலை உள்ளது. நோய்த்தாக்கத்தை உன்னிப்பாகக் கவனித்து, ஒரு ஏக்கருக்கு 400 கிராம் மான்கோசெப் அல்லது 400 கிராம் குளோரோதலோனில் அல்லது நனையும் கந்தகம் 1 கிலோ கிராம் வீதம் பரிந்துரைக்கப்படுகிறது; 2.பின் பருவ இலைப்புள்ளி- ஏக்கருக்கு ஹெக்ஸகோனசோல் 5% EC 600 மில்லி லிட்டர் அல்லது ஏக்கருக்கு ப்ரோபிகோனசோல் 25% EC 200 மில்லி லிட்டர் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மிளகாய் | 1.மிளகாயில் நாற்றழுகல் ஏற்படுவதற்கு சாதகமனா வானிலை உள்ளது. நோய்த்தாக்கத்தை உன்னிப்பாகக் கவனித்து, ட்ரைகோடெர்மா விரிடி 4 கிராம் எடுத்து ஒரு கிலோ விதையுடன் கலந்து விதை நேர்த்தி செய்யவும்; அல்லது விதைப்பதற்கு 24 மணி நேரத்துக்கு முன் சூடோமோனாஸ் ஃப்ளோரன்ஸிஸ் 10 கிராம் எடுத்து ஒரு கிலோ விதையுடன் கலந்து விதை நேர்த்தி செய்யவும்; 2. சாம்பல் நோய்- நோயின் அறிகுறி கண்டவுடன் 15 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை வீதம் நனையும் கந்தகம் (wettable sulphur) @ ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3 கிராம் என்ற வீதம் அல்லது கார்பெண்டஸிம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம் என்ற வீதம் கலந்து தெளிக்கலாம். |
| கத்திரிக்காய் | கத்தரியில் தற்போது நிலவும் வானிலை காரணமாக சாம்பல் நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த நோயின் அறிகுறி கண்டவுடன் 15 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை வீதம் நனையும் கந்தகம் (wettable sulphur) @ ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3 கிராம் என்ற வீதம் அல்லது கார்பெண்டஸிம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம் என்ற வீதம் கலந்து தெளிக்கலாம். |
| பாகற்காய் | பாகற்காயில் தற்போது நிலவும் வானிலை காரணமாக பழ ஈ தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த நச்சு உணவு/பொறி மெத்தைல் யூஜினால் + மாலத்தியான் 50 EC இரண்டையும் சம அளவு கலந்து (1:1) ஒவ்வொரு பாலித்தீன் பைகளில் 10 மில்லி லிட்டர் அளவுக்கு எடுத்து நச்சுப்பொறியாக ஏக்கருக்கு 10 வீதம் வைக்கலாம். |

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கொய்யா | கொய்யாவில் தற்போது நிலவும் வானிலை காரணமாக பாசி இலைப்புள்ளி மற்றும் பழ புள்ளி நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. i). இதனை கட்டுப்படுத்த தகுந்த உரமிடுதல், நீர் பாய்ச்சல், கவாத்து செய்வதன் மூலம் காற்றோட்டமாகவும் மற்றும் சூரிய கதிர்களினாலும் களைகளை கட்டுப்படுத்தல், மரங்களுக்கு இடைவெளி அமைப்பதன் மூலம் பாசி இலைப்புள்ளி நோயினை கட்டுப்படுத்தலாம். ii). காப்பர் ஆக்ஸி குளோரைட் – 0.25% அளவில் தெளிக்கலாம். |